**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC. 100/2016 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | அ.சா.6 |
| Name | : | **மருத்துவர் அருணா** |
| Father's/Husband Name: | | தங்கவேல் |
| Village | : | **தனியார் மருத்துவமனை, பெரம்பலூர்** |
| Taluk | : | பெரம்பலூர் |
| Age | : | 44/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 27.03.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**(எதிரிகள் 1 மற்றும் 4 ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது ). எதிரிகள் 2, 3 இறந்துவிட்டார். அவர் மீதான குற்றச்சாட்டு அற்றுப்போய்விட்டது)**

**முதல் விசாரணை :–**

நான் தற்போது தனியார் மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் பெரம்பலூர் அரசு தலைமை மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியிலிருந்த போது கடந்த 19.04.2013ம் தேதி இரவு 11.50 மணியளவில் ஜெயசீலா க.பெ முத்துசாமி (வயது 55) என்பவரை அவருடைய மகன் சுரேஷ்குமார் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவரை விசாரணை செய்த போது 19.04.2013 அன்று இரவு 10.30 மணியளவில் பாதிக்கப்பட்டவர் தனது வீட்டில் இருக்கும்போது அடையாளம் தெரிந்த 4 நபர்கள் அவரை ஈட்டி மற்றும் கல்லால் அடித்ததாக அவரது மகன் கூறினார். நான் அவரை பரிசோதனை செய்த போது அவர் சுயநினைவுடன் மூச்சு விட கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். அவருடைய சுவாச துடிப்பு ஒரு நிமித்திற்கு 26 முறை (Tachypneaic) சுவாசம் இருந்தது. அவருடைய இருதய

துடிப்பு சாதாரணமாக இருந்தது. அவருடைய இரத்த அழுத்தம் சீராக இருந்தது. அவருக்கு 1. கழுத்தில் குத்தப்பட்ட காயம் 1.5x1 cmx ஆழம் கணிக்க இயலவில்லை. 2. இடது பக்க முழங்காலில் வலி இருப்பதாக கூறினார். அவருடைய கழுத்தில் குத்தப்பட்ட இடத்தின் பக்கத்தில் வீக்கமும் இருந்தது.

நான் காயம்பட்ட நபரை மேற்சிகிச்சைக்காக 20.04.2013ம் தேதி விடியற்காலை 12.30 மணிக்கு திருச்சி அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தேன். காயம் அடைந்த நபர் திருச்சி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக 20.04.2013 அன்று அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு CT Scan and X–Ray எடுக்கப்பட்டது. ENT (காது மூக்கு, தொண்டை) மருத்துவர் சிகிச்சை அளித்துள்ளனர். மேற்படி மருத்துவர் கொடுத்த கருத்துரையின் பேரில் நான் காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயமானது சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். நான் வழங்கிய விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் **அ.சா.ஆ6 மற்றும் அ.சா.ஆ7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. திருச்சி அரசு மருத்துவமனையில் ஜெயஷீலிக்கு வழங்கப்பட்ட **விபத்து பதிவேடு அ.சா.ஆ8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

முதல் விசாரணையில் கூறிய சங்கதிகளை தான் போலிசார் விசாரணையிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். முதல் விசாரணையில் கூறிய காயங்களின் அளவுகள் குறித்து போலிசார் விசாரணையில் கூறவில்லை என்றால் சரியல்ல. காயம்பட்ட ஜெயஷீலி விபத்து பதிவேட்டில் தெரிந்த 4 நபர்கள் தாக்கியதாக மட்டுமே கூறியுள்ளதாக மட்டுமே சொல்லியுள்ளார் என்றால் சரிதான். தாக்கியவர்கள் ஆண் நபர்களா அல்லது பெண் நபர்களா என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். திருச்சி அரசு மருத்துவர் காயச்சான்றிதழை அளிக்கவில்லை என்றால் சரிதான். திருச்சி மருத்துவர் கொடுத்த கருத்துரையின் அடிப்படையில் நான் காயச்சான்றிதழ் வழங்கினேன் என்றால் சரிதான். திருச்சி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான CT Scan and X–Ray ரிப்போர்ட்டை போலிசார் கைப்பற்றினார்களா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. காது மூக்கு தொண்டை எந்த மருத்துவர் காயத்தின் தன்மையை பரிசோதனை செய்து கருத்துரை வழங்கினார் என விபத்து பதிவேட்டில் குறிப்பிடவில்லை என்றால் பொதுவாக திருச்சி அரசு மருத்துவமனையில் பாதிக்கப்பட்ட நபர் உள்நோயாளியாக தங்கி சிகிச்சை

பெற்றிருந்தால் அங்கு விபத்து பதிவேட்டில் காயத்தின் தன்மையை மட்டுமே குறிப்பிட்டு தருவார்கள் மருத்துவரின் பெயர் தனிப்பட்ட முறையில் குறிப்பிடமாட்டார்கள். பாதிக்கப்பட்டவரின் case sheetல் மருத்துவரின் பெயர் இருக்கும். பாதிக்கப்பட்டவருக்கு ஏற்பட்ட குத்துக் காயம் விபத்து ஏற்படும் போது கல் குத்தினால் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் உள்ளது. ஈட்டியை கொண்டு அதிவேக குத்தினால் மரணம் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் உள்ளது.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.